**தலைப்பு 434 – களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் இராஜாங்க அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இராஜாங்க அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் சுற்றறிக்கையின் 7.7 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறித்த பிழையை சீர்செய்த பின்னர் ஒதுக்க பெறுமதி சரியாக இருக்கும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறோம். | கணக்குகளில் சரியான பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் சமமான பெறுமதி, நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள்/ மூலதனத்தின் கீழ் ஒதக்கமாக காட்டப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் நிதி நிலைமைக் கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்க பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், அத் திகதியில் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 13,255,178 தொகையாகும். | | |
| (ஆ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் சுற்றறிக்கையின் 7.8 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பண கணக்குகளின் பெறுமதியில் இருந்து வைப்பு கணக்குகளின் பெறுமதியைக் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள்/ மூலதனத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டும். அதன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் குறித்த பெறுமதி ரூபா 8,897,862 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்கின் மீதியை பதிவு செய்ய தவறியதால் ஒதுக்கப் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் கணிப்பீடுகளைச் சரியாகச் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | திறைசேரி கணக்குக் குறிப்புக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்பணக் கணக்குகளின் மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துகளின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும், அத் திகதியில் உள்ளவாறான அமைச்சின் முற்பணக் கணக்கின் ரூபா 1,318,626 தொகையான மீதி நிதி நிலைமைக் கூற்றின் நிதிச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ACA 05 (A) உடன் கூடிய ACA 05 பட்டியலின் குழப்பம் காரணமாக குறித்த பிழை ஏற்பட்டிருந்தது. எனினும், எதிர்காலத்தில் கணிப்பீடுகளைச் சரியாகச் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | கணக்குகளுக்கான திறைசேரிக் குறிப்புக்கள் SA-82 மற்றும் பரீட்சை மீதியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 13,255,178 ஆக காணப்பட்ட போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் குறித்த பெறுமதி ரூபா 3,038,690 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் ரூபா 3,038,690 பெறுமதியை சீர்செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 13,500,000 கிரயத்திலான 02 மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. இதனால் அத் தொகையால் நிதியல்லாத சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | மோட்டார் வாகனங்கள் தொடர்பான CIGAS கணனி முறைமையை நாளதுவரையாக்குவதற்கு தேவையான தகவல்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. இதனால் உரிய தகவல்களை பெற்ற பின்னர் குறித்த முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

-------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

**---------------------------------**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டு, ஆண்டின் இறுதி வரையிலும் 03 சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படாத நிதியேற்பாட்டின் பெறுமதி ரூபா 18,817,526 ஆக காணப்பட்டது. இதனால் மாற்றப்பட்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் 15 சதவீதம் முதல் 110 சதவீதம் வரையான விச்சில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மேலதிக நிதியேற்பாடுகள் செய்யப்பட்டு சேமிப்பை ஏற்படுத்தாத வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களினால் சேமிப்புக்கள் காணப்பட்டது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | நி.பி. 50 இல் உள்ள எற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திட்டமிட்டவாறு செலவினத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 4 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் நிதிகள் நிதியாண்டில் அடைந்து கொள்ளப்படக்கூடிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு மட்டுப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். அதற்கு முரணாக நிதியெற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது, இதன் விளைவாக, அமைச்சின் 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 84 சதவீத சேமிப்புக்கள் இருந்தன. | 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலையின் காரணமாக சந்தையில் வீடியோ கேமராக்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய உபபாகங்கள் இல்லாமை, கட்டிடங்களை வாடகைக்கு பெறுதல் நிறுத்தப்பட்டமை, ஊடகப் பிரிவுக்கு சந்தையில் விசேட உபபாகங்களைக் கொண்ட கணனி இல்லாதமை, வரி தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்படும் வரை கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பணம் விடுவிக்கப்படாமை மற்றும் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | வெளிநாட்டு ஆலோசனை சேவைகளைப் பெறுவதில் தாமதம் காரணமாக எதிர்பார்த்தவாறு நிர்மாணங்களை மேற்கொள்ள தவறியமை போன்ற விடயங்கள் குறித்த சேமிப்புக்களிற்கு பங்களித்திருந்தன. | |
| (இ) 2021 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பிரதிநிதித்துவப்படுத்திய 6 மூலதன செலவின விடயங்களிற்குரிய ரூபா 1,013,600,664 மற்றும் 18 மீண்டெழும் செலவின விடயங்களிற்குரிய ரூபா 37,319,415 உள்ளடங்கிய ரூபா 1,050,920,079 கூட்டுமொத்தமான சேமிப்புக்கள் காணப்பட்டன. | சேமிப்பை ஏற்படுத்தாத வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களினால் சேமிப்புக்கள் காணப்பட்டது என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | -மேற்படி- |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுப் பரீட்சிப்புக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான ரூபா 300,162 பொறுப்புக்கள் 2022 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் தீர்ப்பனவு செய்யப்பட்டன, அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 265,248 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் திகதிகளைக் குறிப்பிடும் சிட்டைகள் அல்லது விலைப்பட்டியல்கள் உட்பட எந்தவொரு கொடுப்பனவும் பொறுப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டிற்குரியதாக 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விலைப்பட்டியல்களிற்குரிய ரூபா 34,914 கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. | நி.பி. 94 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு இல்லாமல் பொறுப்புகள் ஏற்படுத்தப்படக்கூடாது. |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br><br>பிரமாணங்கள் 136, 137, 138 | பொருட்களை கொள்வனவு செய்தல் தொடர்பான 2021 திசெம்பர் 22 ஆம் திகதிய ரூபா 2,271,400 விலைப்பட்டியலிற்குரிய உறுதிச்சீட்டு குறித்த விலைப்பட்டியல் அமைச்சிற்கு கிடைத்த நேரத்தில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | Proforma விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டு, அதற்கான காசோலையை எழுதி வழங்குநரிற்கு அதன் பிரதியை அனுப்பி, உரிய பொருட்களைப் பெற்று, விபரக்குறிப்புக்களுடன் இணங்குகிறதா என பரீட்சித்து, பொருட்களின் தரத்தை சான்றுறுதிப்படுத்தி காசோலை கையளிக்கப்பட்டது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில் இந்திய கம்பனியுடன் ஐ.அ.டொலர் 45.27 மில்லியனிற்கு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 அளவில் 03 வருட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>செயல்நடவடிக்கைத் திட்டம் 2021 இன் பிரகாரம் ஆலோசனை சேவை மற்றும் நிர்மாணங்களுக்கான செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் முறையே ரூபா 373 மில்லியன் மற்றும் ரூபா 2,000 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆண்டுக்கான நிதியேற்பாடு ரூபா 1,001 மில்லியன் ஆகும். எனினும், ஆண்டின் போது ஆலோசனை சேவைகளுக்காக மாத்திரம் ரூபா 142.3 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததால், ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 858.71 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்தின் வரி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அந்த ஆண்டு தொடர்பான வரிக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 150 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்கு 2017 மே 05 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், பொருத்தமான ஆலோசனை சேவையை வழங்குவது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் EXIM வங்கியால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br><br>ஆரம்ப ஆலோசனை 2020 ஒக்தோபர் 12 இல் தொடங்கப்பட்ட போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அதிக மழைப்பொழிவு காரணமாக 2022.05.07 வரை நீடிக்கப்பட்டதன் மூலம் 73 சதவீத பௌதீக முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தது.<br><br>2021 ஆம் ஆண்டில் நிர்மாண பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டதால், ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீத முற்பணத்தை செலுத்த முடியவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்திற்கு மறைமுக வரியில் இருந்து விலக்களிக்கப்பட முடிந்த போதிலும், இந்த செயற்திட்டத்திற்கு நேரடி வரி பொருந்தும். 2021 ஆம் ஆண்டில் வரி செலுத்தப்பட்டிருக்காததால், 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து 10 சதவீத பிடித்துவைத்தல் வரி அறவிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் பெறப்பட்ட விலைப்பட்டியல்களிலிருந்து முன்னர் செலுத்தப்பட்ட விலைப்பட்டியல்களிற்குரிய பிடித்துவைத்தல் வரியை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட பின்னர் கடப்பாட்டுக் கட்டணங்களை கொடுப்பனவு செய்தல் தொடர்பான அபாயங்களைத் தவிர்ப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் போது செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்குத் தேவைப்படும் அனுமதிகள் மற்றும் இணக்கங்கள் குறித்து முன்கூட்டியே பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் குறித்த நடவடிக்கைகளுக்கு போதுமான கால எல்லை ஒதுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,271,400 பெறுமதியான கேமரா உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலின் போது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான திகதியைக் குறிப்பிடத் தவறியமை, கேள்விதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் கேள்வி திறத்தலின் போது பங்கேற்றார்களா என்பதற்கான சான்றுகள் கிடைக்காமை, கேள்விகோரல் ஆவணத்தில் கேள்விகளை வழங்குவதற்கான நிபந்தனைகள் சேர்க்கப்படாமை, செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்வதிலும் ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதிலும் தோல்வி போன்ற பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. | கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான ஆகக்குறைந்த நாட்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டும் கேள்வி திறத்தலில் பங்கேற்பதற்கு நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறும் பதிவு அல்லது மின்னஞ்சல் மூலம் பெறுகைகளை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன, மேலும், செயலாற்றல் பிணைமுறி மற்றும் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காததுடன் உறுதிச்சீட்டை தயாரித்த பின்னர் விலைப்பட்டியல் அதனுடன் இணைக்கப்பட்டது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | தேசிய பெறுகை முகவராண்மையின் 2006 மார்ச் 01 ஆம் திகதிய 09 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4. நல்லாளுகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் அனைத்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அம்சங்கள், அதன் வளங்கள் பொருளாதார ரீதியாகவும் திறமையாகவும் ஒட்டுமொத்தமாக அத்தகைய நிறுவனத்தின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் நோக்கத்திற்காக அல்லது கிடைக்கக்கூடிய வளங்களுக்கு முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட செயற்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட கால எல்லைகளுக்குள் அத்தகைய | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவின விடயங்கள் உண்மையில் அடையப்பட்டுள்ளனவா என்பதையும், திட்டங்களில் கூறப்பட்டுள்ளவாறு ஏதேனும் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் உண்மையில் செயற்பாட்டில் உள்ளதா என்பதையும் மதிப்பாய்வு செய்ய வேண்டும். எனினும், அத்தகைய மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சில் ஆண்டின் இறுதியளவில் நாளாந்த நடவடிக்கைகளை நேரடியாகப் பாதிக்கும் வகையில் சிரேஷ்ட நிலையில் 08 வெற்றிடங்களும் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் 36 ஊழியர் வெற்றிடங்களும் காணப்பட்டன. | பிரச்சனைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அமைச்சின் நோக்கங்களை அடையும் வகையிலும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினரையும் உத்தியோகத்தர்களையும் சிரமங்களுக்கு மத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் இதுவரையான பணிகளைச் செய்ய முடிந்தது. | அமைச்சின் கடமைகள் மற்றும் பணிகளைச் செய்வதற்கு போதுமான பதவியணியினர் பேணப்பட வேண்டும். |